ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1708/10 - 2011 මැයි 30 වැනි සඳුදා - 2011.05.30
1708/10 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

கண்டி மாநகர சபை

**துணை விதிகள்**

*252 ஆம் அதிகாரமான மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் (1 ஆம்) உப பிரிவோடு வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின்படி மாநகர சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கண்டி மாநகர சபையினால் ஆக்கப்பட்டு 2010.07.29 ஆந் திகதி நடைபெற்ற அம்மாநகர சபையின் இலக்கம் 8(53) ஆம் பிரேரணையின்படி நிறைவேற்றப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காணப்படும் கண்டி மாநகர சபையின் கழிவு நீர் முகாமைத்துவ தொகுதி தொடர்பான துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவோடு வாசிக்கப்படும் மேற்கூறிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 (8 ஆம் பிரிவின் (1 ஆம்) உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான சரத் ஏக்கநாயக்கா ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*மத்திய மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி.*
*2011.04.26.*

**துணை விதிகள்**

*இத்துணைவிதிகள், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கண்டி மாநகரசபையின் கழிவுநீர் முகாமை முறைமை தொடர்பான துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. இத்துணைவிதிகள், கண்டி மாநகரசபையின் நிருவாக எல்லைகளில் முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பினுள் உள்ள கட்டிடங்களுக்கும், நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டிடங்களுக்கும், இடம்பெறக்கூடிய வேறேதேனும் நிர்மாணிப்புக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*3. ஏதேனும் கட்டிடத்திலிருந்தான அல்லது அதன் ஏதேனும் பாகத்திலிருந்தான கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் கையுதிர்த்தற் குழாய் (இதனகத்துப்பின்னர் "முறைமை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கழிவுநீர் முகாமை முறைமையுடன் தொடுக்கப்படுதல் வேண்டும்.*

4. (i) (இதனகத்துப் பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாநகர ஆணையாளர், அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டை அல்லது முறையீட்டைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஏதேனும் கட்டிடத்திலிருந்தான உளதாயுள்ள கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் கையுதிர்த்தற் குழாய்கள் திருப்தியற்றனவென அபிப்பிராயப்படுமிடத்து, அதற்கான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு சுகாதார மருத்துவ அலுவலரை அல்லது ஆணையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(ii) ஆணையாளர் அத்தகைய அறிக்கையை நுனித்தாராய்ந்ததன் மேலும், முறைமையுடன் குழாயொன்றைத் தொடுப்பதற்கான தேவைப்பாட்டின் அவசியம் பற்றித் திருப்திப்படுவதன் மேலும், ஆறு மாதகாலப் பகுதியினுள் அல்லது தொழினுட்பத் தேவைப்பாடுகளின் தன்மையைக் கவனத்திற்கொண்டு ஆணையாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குழாய் முறைமையுடன் தொடுக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

5. (அ) கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் கையுதிர்த்தற் குழாயை முறைமையுடன் தொடுப்பதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், இத்துணைவிதிகளுக்கான இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், அதன்கண் விதிக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(ஆ) ஆணையாளர் அதற்கான விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், மதிப்பிடப்பட்ட ஆகுசெலவையும் தேவைப்பாட்டின் சாத்தியத்தன்மையையும் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், குழாயை முறைமையுடன் தொடுப்பதற்கான தேவைப்பாட்டின் அவசியம் பற்றித் திருப்திப்படுவதன்மேல் அத்தகைய விண்ணப்பத்தை அங்கீகரித்தல் வேண்டும்.

(இ) இத்துணைவிதிகளின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, ஆணையாளர், தளக்கோலத்தின் பொருத்தமான தன்மையையும் அதனை அணுகக்கூடிய தன்மையையும் கவனத்திற்கொண்டு, குழாய்கள் இடப்படக்கூடிய முறையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள கட்டளைகளின் நியதிகளின்படி மதிப்பிடப்பட்ட ஆகுசெலவைத் தயாரிக்கத் செய்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய மதிப்பிடப்பட்ட ஆகுசெலவை விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஈ) கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் கையுதிர்த்தற் குழாய்களை முறைமையுடன் தொடுப்பதற்கான அத்தகைய விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதன்மேல், சொந்தக்காரர் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளர், ஆணையாளரினால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அங்கீகரிக்கப்பட்ட அளவையும் தரத்தையும் கொண்ட குழாய்களையும் பொருத்திகளையும் பயன்படுத்துதல் வேண்டும்.

6. (அ) குழாய்களை இடுவதிலும் பேணுவதிலும் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற தகுதிவாய்ந்த ஒவ்வோராளும், சபையினால் நியமிக்கப்பட்ட தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்குக் காலத்துக்குக்காலம் பதிவுக்காக விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(ஆ) தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவுசெய்யப்படும் ஒவ்வோராளும்–

(i) மூன்றாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவத்தில் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளும்படியும்,
(ii) இத்துணை விதிகளுக்கான நான்காம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட உரிமக்கட்டணக் கொடுப்பனவின்மேல் அதற்கென உரிமமொன்றைப் பெறும்படியும்,

தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. ஆறாம் துணைவிதியின்கீழ் அதற்கென உரிமமொன்றைப் பெற்றுள்ள ஆள் தவிர்ந்த ஆளெவரும், முறைமையுடன் தொடுக்கப்படும் கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாய்களை இடுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

8. கழிவுப்பொருளின் மற்றும் கழிவுநீரின் தங்குதடையற்ற ஓட்டத்தை வசதிப்படுத்துவதற்குச் சபையானது பொருத்தமான இடங்களில் பம்பி மனைகளை நிர்மாணிக்கலாம்.

9. கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாயொன்று ஒரு தனிப்பட்ட காணியின் அல்லது ஆதனத்தின் குறுக்கே இடப்படுவதற்குத் தேவைப்படுமிடத்து, ஏதேனும் நட்டத்தை அல்லது சேதத்தை மிகக்குறைந்ததாக்குவதற்கு, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் –

(அ) அவசியமானவிடத்து, சபையானது, முறைமைக்காக எவையேனும் குழாய்களை இடுவதில், விடயத்துக்கேற்ப, ஏதேனும் தெரு அல்லது ஒரு தெருவாகவிருப்பதற்குத் திட்டமிடப்பட்ட அல்லது உட்கருதப்பட்ட ஏதேனும் இடம் என்பவற்றினூடாக,

அவற்றின் குறுக்கே அல்லது அவற்றின்கீழ் அல்லது ஏதேனும் கட்டிடத்தின்கீழ் அல்லது ஏதேனும் குடைவழி, சிற்றறை அல்லது வில்வளைவு என்பவற்றினூடாக அல்லது ஏதேனும் அடைக்கப்பட்ட அல்லது வேறு காணியினூடாக அத்தகைய இடுகையை நிறைவேற்றலாம். சபையானது, அதன் உட்கருத்துப் பற்றி அத்தகைய கட்டுவேலையினால் பாதிக்கப்பட்ட காணியின் சொந்தக்காரருக்கு அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளருக்கு இரு பஞ்சாங்க மாத அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடு செய்யப்பட்ட கழிவுப்பொருட் குழாய்களை இடுவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளருக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காகச் சபையானது நட்டஈடு செலுத்துதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் நட்டத்தை அல்லது சேதத்தை உற்றிருக்கும் சொந்தக்காரர் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளர், அத்தகைய கட்டுவேலை தொடர்பிலான உரிமைக் கோரிக்கை எத்திகதியன்று எழுந்துள்ளதோ அத்திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் சபைக்கு அதற்கென விண்ணப்பமொன்றைச் செய்யலாம் ;

(ஈ) நட்டஈட்டுத்தொகை தொடர்பாக எழுந்துள்ள பிணக்கொன்றின் விடயத்தில், இன்னலுற்ற திறத்தவர் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம் ;

(உ) ஆணையாளர், அத்தகைய மேன்முறையீட்டின்மீது சபையின் முடிபை, அத்தகைய மேன்முறையீடு பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து முப்பதுநாட் காலப்பகுதியொன்றினுள் இன்னலுற்ற திறத்தவருக்குத் தெரிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) பந்தி (ஈ) இற் குறிப்பீடு செய்யப்பட்ட மேன்முறையீடொன்று தொடர்பில் சபையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

10. (அ) எவையேனும் வளவுகளின் கழிவுப்பொருளை வெளியேற்றுவதற்குத் தேவைப்பட்ட கழிகானைக் கொண்டுசெல்வதற்கான ஒரே அல்லது மிகச்சிறந்த வழி, அதனை வளவுகளின் சொந்தக்காரரல்லாத ஆளொருவருக்குச் சொந்தமான ஏதேனும் காணியினுள், அதனூடாக அல்லது அதன்கீழ் கொண்டுசெல்லுதல் எனச் சபைக்குத் தோன்றுமிடத்து, சபையானது, கழிவுப்பொருளானது சொல்லப்பட்ட காணியினுள் அதனூடாக அல்லது அதன்கீழ் கொண்டுசெல்லப்படுதலாகாதெனக் காரணங்களைக் கொடுப்பதற்கு நியாயமான வாய்ப்பொன்றைச் சொல்லப்பட்ட காணியின் சொந்தக்காரருக்கு அளித்த பின்னர், ஆட்சேபனை எதுவும் எழுப்பப்படாவிட்டால் அல்லது எழுப்பப்பட்ட ஏதேனும் ஆட்சேபனை திருப்திகரமற்றதெனச் சபைக்குத் தோன்றினால், எழுத்திலான கட்டளை மூலம், அனுமதிப்பதற்குத் தகுதியானதெனச் சபை கருதுகின்றவாறான அத்தகைய முறையில் சொல்லப்பட்ட காணியினுள், அதனூடாக அல்லது அதன்கீழ் அவரது கழிகானைக் கொண்டுசெல்லும்படி சொல்லப்பட்ட வளவுகளின் சொந்தக்காரருக்கு அதிகாரமளிக்கலாம்.

(ஆ) அவசியமான கட்டுவேலையை நிறைவேற்றுவதற்கென மு. ப. 6 மணிக்கும் பி. ப. 6 மணிக்கும் இடையே எந்நேரத்திலும் உதவியாளர்களுடனும் வேலையாட்களுடனும் சொல்லப்பட்ட காணியின் மீது உட்பிரவேசிப்பதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய நியாயமான எழுத்திலான அறிவித்தலைச் சொந்தக்காரருக்கு அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளருக்குக் கொடுத்தபின்னர், அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அது எவ்வாளின் சார்பில் ஆக்கப்பட்டதோ அவ்வாளுக்கு, அல்லது அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் முகவருக்கு அல்லது ஆளுக்குச் செல்லுபடியான அதிகாரமாதல் வேண்டும்.

(இ) இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளர், அல்லது ஏதேனும் கழிவுப்பொருளைக் கையுதிர்க்கும் நோக்கத்துக்காக அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் முகவர் அல்லது ஆள், அவரது வளவுகளின் கழிவுப்பொருளுக்காக எந்த இயைபான காணியில் கழிகானொன்று ஏலவே சட்டமுறையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதோ அந்த இயைபான காணியின் சொந்தக்காரருக்கு அவரது உட்கருத்துப் பற்றிய நியாயமான எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர், அத்தகைய கழிகானைத் திருத்தும் அல்லது துப்புரவாக்கும் நோக்கத்துக்காக மு. ப. 6 மணிக்கும் பி. ப. 6 மணிக்கும் இடையே எந்நேரத்திலும் உதவியாளர்களுடனும் வேலையாட்களுடனும் சொல்லப்பட்ட காணியின் மீது உட்பிரவேசிக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், அவசர நிலைமையொன்றில், அத்தகை கழிகானுக்கான ஏதேனும் திருத்தத்தை அல்லது துப்புரவாக்குகையைச் சொய்யும் நோக்கத்துக்காக அத்தகைய வளவுகளினதும் காணியினதும் சொந்தக்காரருக்கும் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளருக்கும் இயைபான காணியின் சொந்தக்காரருக்கும் தெரிவித்தபின்னர் பி. ப. 6 மணிக்குப் பின்னர் சொல்லப்பட்ட காணியின் மீது உட்பிரவேசித்தல், சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது வேலையாளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ஈ) இத்துணைவிதியின்கீழ் ஏதேனும் வேலையை நிறைவேற்றுவதில், சபையானது, அத்தகைய வளவுகளுக்கு விளைவிக்கப்படக்கூடிய ஏதேனும் நட்டத்தை அல்லது சேதத்தை மிகக்குறைந்ததாக்குவதற்கு அத்தகைய வழிமுறைகளை எடுத்தல்

வேண்டும் ; அத்துடன் வளவுகளின் எந்தச் சொந்தக்காரருக்காக அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளருக்காகக் கட்டுவேலையானது நிறைவேற்றப்படுகின்றதோ அந்தச் சொந்தக்காரர் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளர்–

(i) ஆகக்குறைந்த செயல்முறைக்குகந்த தாமதத்துடன் அக்கட்டுவேலை நிறைவேற்றப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் ;

(ii) சொல்லப்பட்ட கட்டுவேலையை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அகழ்ந்தெடுக்கப்பட்ட காணியை அவரின் சொந்தச் செலவில் மீட்டெடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) சொல்லப்பட்ட கட்டுவேலையை நிறைவேற்றுவதன் மூலம் அவரது ஆதனத்துக்கான சேதத்தை உறுகின்ற எவரேனுமாளுக்கு, அவ்விடத்தை அதே நிலைமைக்கு மீட்டெடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப் பெறுமதியைக் கவனத்திற்கொண்டு, நட்டஈடு செலுத்துதல் வேண்டும்.

(உ) இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் காணியின் சொந்தக்காரர் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளர் எவரும், சபைக்கு நியாயமான காரணம் கொடுக்காமல் ஏதேனும் கட்டுவேலையின் நிறைவேற்றுகையை அனுமதிப்பதற்கு மறுத்தலாகாது அல்லது தடுத்தலாகாது. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மீறுகை தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(ஊ) இத்துணைவிதியின்கீழ் கழிகானொன்று ஏதேனும் காணியினுள், அதனூடாக அல்லது அதன்கீழ் கொண்டுசெல்லப்பட்டுள்ளபோதும், அதன் பின்னர் எந்நேரத்திலும் அத்தகைய காணியின்மீது கட்டிடமொன்றை நிறுவுவதற்கு அத்தகைய காணியின் சொந்தக்காரர் விரும்புகின்றபோதும், சபையானது எழுத்திலான அறிவித்தல்மூலம், எந்தச் சொந்தக்காரரின் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளரின் நன்மைக்காக அத்தகைய கழிகான் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சொந்தக்காரரை அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளரை, சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதனை மூடிவிடும்படியும், அகற்றும்படியும், திசை திருப்பும்படியும், மீள நிர்மாணிக்கும்படியும் அல்லது பாதுகாக்கும்படியும் மற்றும் காணியை அதன் முன்னைய நிலைமைக்கு மீட்டெடுக்கும்படியும் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(எ) ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளரும், சபையினால் தெரிவிக்கப்பட்டவாறு, நியாயமான காலத்தினுள் 10 ஆம் துணைவிதியின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இத்துணைவிதியின் ஏதேனும் மீறுகை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது வேலையாளர், மு. ப. 6 மணிக்கும் பி. ப. 6 மணிக்கும் இடையேயான எந்நேரத்திலும் அத்தகைய உட்பிரவேசத்துக்கு முன்னர் ஏதேனும் தனியார் காணியின் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு எழுத்தில் உரிய அறிவித்தல் கொடுத்தபின்னர் முறைமையைச் சோதனை செய்யும், திருத்தும், துப்புரவாக்கும் அல்லது பேணும் நோக்கத்துக்காக அதன்மீது உட்பிரவேசித்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

12. ஆளெவரும், முறைமையைத் திருத்துதல் சம்பந்தமாக மண்ணை அகழ்ந்தெடுத்தல் மற்றும் அப்புறப்படுத்துதல் போன்ற சபையின் பேணுகை வேலையில் ஈடுபட்டிருக்கையில் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது வேலையாளருக்கு முட்டுக்கட்டையிடுதலாகாது. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இத்துணைவிதியின் ஏதேனும் மீறுகை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

13. ஆளெவரும், குழாய்கள், பம்பி மனைகள், தொட்டிகள் (ஆள்செல் துவாரங்கள்) அல்லது இம்முறைமையின் வேறேதேனும் ஆக்கக்கூறு அல்லது பாகம் என்பவற்றுக்கு எத்தகையதுமான ஏதேனும் சேதத்தை விளைவித்தலாகாது.

14. துணைவிதி 13ஐ மீறுகின்ற ஆளொவ்வொருவரும் குழாய்கள், பம்பிமனைகள், தொட்டிகள் (ஆள் செல் துவாரங்கள்) அல்லது முறைமையின் வேறேதேனும் ஆக்கக்கூறு அல்லது பாகம் என்பவற்றைத் திருத்துவதில் சபையினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், கொடுப்பனவைச் செலுத்தத்தவறும் விடயத்தில், ஆணையாளர், செலவுகளின் கொடுப்பனவு உரிய முறையில் செலுத்தப்படும் அத்தகைய காலம்வரை, அவ்வாளுக்கு வழங்கப்பட்ட நீர்ச்சேவையைத் தற்காலிகமாகத் துண்டிப்பதற்கான நடபடிகளை எடுக்கலாம்.

15. (1) முறைமையுடன் தொடுப்பதனூடாகக் கழிவுப்பொருட் கையுதிர்ப்புச் சேவையைப் பெறுகின்ற ஆளொவ்வொருவரிடமிருந்தும், மாதாந்த நீர்ப்பாவனைக்கிணங்க அல்லது சபையினால் தீர்மானிக்கப்படும் முறையில் கணக்கிடப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை இறுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு இறுக்கப்படவேண்டிய அல்லது அறவிடப்படவேண்டிய தொகையானது மாதாந்த நீர்ப்பாவனைச் சிட்டையில் சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும். அத்தகைய

ஆள் முப்பதுநாட் காலப்பகுதியினுள் அச்சிட்டையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். கொடுப்பனவில் தவறுகை அல்லது தாமதம் ஏற்படும் பட்சத்தில், சிட்டையானது, ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் தொடர்பாக 10% செலவுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு இறுக்கப்பட்ட அல்லது அறவிடப்பட்ட மொத்தத்தொகையை நாற்பத்தைந்து நாட்களினுட் செலுத்துவதற்குத் தவறுதல், நீர்ச்சேவை தற்காலிகமாகத் துண்டிக்கப்படுவதனை விளைவித்தலும் வேண்டும்.

(2) கழிவுப்பொருட் கையுதிர்ப்பு நோக்கத்துக்காக மட்டும் முறைமையுடன் தொடுப்பதற்கு விரும்புகின்றவரும் அல்லது உட்கருதுகின்றவரும், சபையிடமிருந்து ஏதேனும் நீர்த்தொடுப்பைப் பெறாதுள்ளவருமான எவரேனுமாள், ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து சபைக்கு அதற்கென விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அவ்வாளினால் மாதாந்தச் சராசரி நீர்ப்பாவனைக்கிணங்க கணக்கிடப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை அத்தகைய ஆளிடமிருந்து இறுக்கப்படுதல் வேண்டும்.

16. ஆளெவரும்-

(i) அத்தகைய பொருளை அல்லது பதார்த்தங்களைப் பெறுவதற்குப் பொருத்தமானதற்ற அல்லது உட்கருதப்படாத, முறைமையின் குழாய்களினுள் ஏதேனும் திண்மக் கழிவை, பூச்சிகொல்லியை, மழைநீரை, மாசுபடுத்தப்பட்ட மழைநீரை மற்றும் மாசுபடுத்தப்பட்ட திரவங்களை மற்றும் இரசாயனப் பொருட்களை ;

(ii) கொதிநீரை, நீராவியை, கழிகானின் தங்குதடையற்ற ஓட்டத்தையும் கழிவுப்பொருட்களின் பரிகரிப்பையும் கையுதிர்ப்பையும் பாதிக்கின்ற எதனையும் அல்லது வேறுவகையில் தொல்லையை உருவாக்கும் சாத்தியங்கொண்டதாகவிருக்கும் எதனையும் ;

(iii) அதனுள் அல்லது அதனூடாக, பெறுவதற்கு உட்கருதப்படாததும் அல்லது அதன் காரணமாக வேறேதேனும் குழாய்க்கு முட்டுக்கட்டை ஏற்படும் சாத்தியங்கொண்டதும் அல்லது வேறுவகையில் தொல்லையை உருவாக்கும் சாத்தியங்கொண்டதும், முறைமையின் ஏதேனும் ஆக்கக்கூறுக்கும் அதன் பாகத்துக்கும் அல்லது அதனோடு தொடுக்கப்பட்ட ஏதேனும் குழாய்க்கும் முட்டுக்கட்டையிடுகின்றதுமான ஏதேனும் மண்ணை, செங்கல்லை அல்லது கல்லை, சாம்பலை அல்லது வேறேதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தை,

கையுதிர்த்தலோ, வெளியேற்றுதலோ, வீழ்த்துதலோ, கொட்டுதலோ, செல்லவிடுதலோ, ஓடவிடுதலோ, இடுதலோ அல்லது கையுதிர்க்கச் செய்தலோ, வெளியேற்றச் செய்தலோ, வீழ்த்தச் செய்தலோ, கொட்டச் செய்தலோ, செல்லும்படி செய்தலோ, ஓடும்படி செய்தலோ அல்லது இடச்செய்தலோ ஆகாது.

17. ஆளெவரும், சபையின் எழுத்திலான அனுமதியுடனன்றி, வெளிச்செல்கைக் குழாய் அல்லது அதனோடு தொடுக்கப்பட்ட வேறேதேனும் உபகரணம் அல்லது பொருத்தியுட்பட ஏதேனும் வடிகாலின் அல்லது மலசலகூடத்தின் பொருத்துகையை, தன்மையை அல்லது நிலையை மாற்றுதலோ அல்லது அதற்கு முட்டுக்கடையிதலோ, அதனை அகற்றுதலோ, மூடிவிடுதலோ, மாற்றுதலோ அல்லது மாற்றீடு செய்தலோ ஆகாது.

18. ஆளெவரும், இத்துணைவிதிகளுக்கு முரணாகவிருப்பதனை விளைவிக்கும், அத்தகையவொரு முறையில், ஏதேனும் கட்டிடத்தில் அல்லது அதே வளவுகளினுள் உள்ள வேறேதேனும் கட்டமைப்பில் அல்லது அதன் நன்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கழிகானை, மலசலகூடத்தை அல்லது உபகரணத்தை நிறுவுதலோ, மீள நிறுவுதலோ அல்லது மாற்றுதலோ ஆகாது.

19. ஆளெவரும், சபையின் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் எழுத்திலான அனுமதியின்மீது தவிர-

(i) முறைமையின் ஏதேனும் குழாயுடன் எதனையும் தொடுத்தலோ அல்லது தொடுக்கச் செய்தலோ ஆகாது ;

(ii) முறைமையின் ஏதேனும் உள்ளகக் குழாயைத் திருத்துதலோ அல்லது திருத்தச் செய்தலோ ஆகாது ; அல்லது

(iii) முறைமையிலிருந்து அல்லது குழாய்களிலிருந்து, பம்பி மனைகளிலிருந்து, தொட்டிகளிலிருந்து (ஆள்செல் துவாரங்கள்) அல்லது வேறேதேனும் ஆக்கக்கூறிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து எதனையும் அகற்றுதலாகாது.

20. ஆளெவரும், துணைவிதிகள் 17, 18, 19, 20 ஆகியவற்றின் முற்போந்த ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுதலாகாதென்பதுடன், மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மீறுகை தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

21. (i) ஆளெவரும், முதலில் கேட்டுப்பெறப்பட்ட சபையின் அல்லது சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் எழுத்திலான அதிகாரமின்றி, முறைமையின் மீது ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேறு கட்டமைப்பை நிறுவுதலோ அல்லது நிர்மாணித்தலோ, அல்லது அது நிறுவப்படுவதனைச் செய்வித்தலோ அல்லது நிர்மாணிக்கப்படுவதனைச் செய்வித்தலோ ஆகாது. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இத்துணைவிதியின் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ii) சபையானது, சபையின் சம்மதமின்றி நிறுவப்பட்டதும் அல்லது நிர்மாணிக்கப்பட்டதும் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டுவேலையை இடித்தழிக்கும்படி, மாற்றும்படி அல்லது இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுக வேறு வகையில் கொண்டுவரும்படி செய்விக்கலாமென்பதுடன், ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறாக அதன் மூலம் உறப்பட்ட செலவுகள், சபையின் ஏதேனும் அதிகாரமின்றி அத்தகைய கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவியுள்ள அல்லது நிர்மாணித்துள்ள அல்லது அது நிறுவப்படுவதனை அல்லது நிர்மாணிக்கப்படுவதனைச் செய்வித்துள்ள ஆளினால் செலுத்தப்படுதலும் வேண்டும். ஏதேனும் தவறுகை புரியப்படும் பட்சத்தில் அது, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 275 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

22. துணைவிதி 21 இல் குறிப்பீடு செய்யப்பட்ட முறைமைக்கு முட்டுக்கட்டையிடும் எவரேனுமாள், முறைமையின் குழாய்களுக்கு விளைவிக்கப்படும் அத்தகைய முட்டுக்கட்டைகளை அகற்றுவதில் சபையினால் உறப்பட்ட செலவுகளைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் தவறுகை புரியப்படும் பட்சத்தில், அது மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 275 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

23. (1) (i) தனியார் கழிவுப்பொருட் குழாய்களை அல்லது கழிவுப்பொருள் உபகரணத்தை நிர்மாணித்தல், பொருத்துதல் அல்லது மாற்றுதல் ; அல்லது

(ii) ஏதேனும் தனியார் கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாயை முறைமையுடன் தொடுத்தல் என்பன சம்பந்தமான எல்லாக் கட்டுவேலையும், இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க, கழிவுப்பொருட் சேவை வழங்கப்பட்டதும், சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான வளவுகளின் சொந்தக்காரரினது அல்லது சட்டப்படியான இருப்பாட்சியாளரினது ஆகுசெலவிலும் செலவுகளிலும் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மட்டுமே அல்லது அதற்கெனச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் ஏற்பாடுகளின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கட்டுவேலை, சபையினால் அதற்கென அதிகாரமளிக்கபபட்ட அலுவலர்களினால் நாளின் நியாமான எல்லா நேரங்களிலும் சோதனைக்கமைந்ததாதல் வேண்டும்.

24. (1) கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் எவையும், அத்தகைய குழாயின் நிறுவுகை இத்துணைவிதிகளுக்கு இணங்கியொழுக நிறைவேற்றப்பட்டுள்ளதென்ற பொருள்பட ஆணையாளரின் அங்கீகாரத்தின் மீது தவிர, பயன்படுத்தப்படுதலாகாது.

(2) ஆணையாளர், (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவுகையை, அத்தகைய குழாய்களைப் பரிசோதனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விதப்புரைகளின்மேல் அங்கீகரித்தல் வேண்டும்.

25. இத்துணைவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"சபை" என்பது, கண்டி மாநகரசபை என்று பொருளாகும் ;

"ஆணையாளர்" என்பது, கண்டி மாநகரசபையின் மாநகர ஆணையாளர் என்று பொருளாகுமென்பதுடன், இத்துணைவிதிகளின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும் ;

"மருத்துவ அலுவலர்" என்பது, கண்டி மாநகரசபையின் மருத்துவ அலுவலர் என்று பொருளாகும் ;

"குழாய்" என்பது, கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் என்று பொருளாகும் ;

"கழிவுநீர் முகாமை முறைமை" என்பது, கழிவுப்பொருளையும் கழிவுநீரையும் பரிகரிப்புப் பொறித்தொகுதிக்குக் கொண்டுசெல்லும் குழாய் என்று பொருளாகும் ; அத்துடன்

"கழிவுநீர்" என்பது, கழுவுகூடங்கள், மலசலகூடங்கள், குளியலறைகள், சமையலறை என்பவற்றிலிருந்து மட்டும் வெளியேற்றப்படும் நீர் என்று பொருளாகுமென்பதுடன், ஏதேனும் கைத்தொழிற் கழிவை உள்ளடக்காது.

### *முதலாம் அட்டவணை*

*1967 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதிய 718/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கண்டி மாநகரசபையின் நிருவாக எல்லைகள்.*

### *இரண்டாம் அட்டவணை*

### கழிகான் தொடுப்புக்கான விண்ணப்பம்

(1) கண்டியில் ........................................................................ வீதியிலுள்ள/தெருவிலுள்ள/ஒழுங்கையிலுள்ள .................................................. ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளின் சொந்தக்காரரான/சட்டப்படியான இருப்பாட்சியாளரான வண./திரு./திருமதி/செல்வி ........................................ ஆகிய நான், உங்கள் அங்கீகாரத்தின்மேல் இதனோடு சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இணங்க, இதற்கு ஏற்புடையற்பாலதான கட்டளைச் சட்டத்தினதும் துணைவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகவும், விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட வளவுகளின் கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாயிலிருந்து கழிவுநீர் முகாமைத்திட்டத்துடன் கழிகான் தொடுப்பொன்றை நிர்மாணிப்பதற்கான எனது உட்கருத்துப் பற்றிய அறிவித்தலை இத்தால் கொடுக்கின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கு இசைந்தொழுகாத அல்லது கட்டளைச் சட்டத்தினதும் துணை விதிகளினதும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவையேனும் நிர்மாணிப்புகளுக்காக நான் பொறுப்புடையவராக்கப்படுவேனென்று நான் மேலும் உடன்படுகின்றேன்.

விண்ணப்பகாரரின் பெயர் :...........................................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம் :................................................................
திகதி :..................................................

(2) விண்ணப்பக் கட்டணம் : ரூபா 200.

*(துணைவிதி 5, 6)*

### *மூன்றாம் அட்டவணை*

### தொடுப்பு மதிப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான கட்டளைக் கற்கள்

(1) பிரதான குழாயிலிருந்து இடைமறிக்கும் ஆள்செல் துவாரம் வரையிலான தொடுப்பு (எம்எச்-ரீ முதல் (சீ-1) வரை

| விடய இல. | விவரணம் | அளவு | கூறு | வீதம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | **அகழ்தல்**<br>பிரதான குழாயிலிருந்து இ. ம. ஆள்செல் துவாரம் வரை<br><br>மேன்மிகையாகவுள்ள பொருட்களை மீளநிரப்புதல், அடித்திறுக்குதல், பரப்புதல் மற்றும் மட்டப்படுத்துதல் உட்பட, தகர்த்தல் தேவையாகவுள்ள பாறைக்கல் தவிர்ந்த ஏதேனும் பொருளை 450 மீ.மீ. அகலமான அகழிகளில் அகழ்தல், வீதமானது பணிக்கப்பட்டவாறு ஏதேனும் விஞ்சுதலாகவுள்ள பொருளைக் கையுதிர்ப்பதற்கான கட்டணத்தையும் உள்ளடக்கும். | | | | |
| 1 | 2.0 மீற்றரை விஞ்ஞாததான ஆகக்கூடிய ஆழம் | | எம்$^3$ | | |
| | **மணற்படுக்கையிடுதல்** | | | | |
| 2 | 450 மி. மீற்றரைக் கொண்ட ஆகக்குறைந்த அகலத்துக்கும் 100 மி. மீற்றரைக் கொண்ட ஆழத்துக்கும் அகழிநெடுகிலும் மணலிடுதல் | | எம்$^3$ | | |

| விடய இல. | விவரணம் | அளவு | கூறு | வீதம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | **குழாயிடுதல்** | | | | |
| 3 | 160 மி. மீ. விட்ட வகையினவான 600யூபீவீசீ குழாய்களை வழங்குதலும், இடுதலும் இணைத்தலும் | | எம் | | |
| 4 | 110 மி. மீ. விட்ட வகையினவான 600 யூபீவீசீ குழாய்களை வழங்குதலும், இடுதலும், பொருத்துதலும் | | எம் | | |
| | **இடைமறிக்கும் ஆள்செல் துவாரமொன்றை நிர்மாணித்தல்** | | | | |
| 5 | வரைதல்களில் காட்டப்பட்டவாறு இடைமறிக்கும் ஆள்செல் துவாரத்தை நிர்மாணித்தல் (இம-டீ1). 100 மி. மீ. தடிப் பான அடித்தளம் 1:2:4 (19) கொங்குறீற்றுக் கலவையில் இருத்தல் வேண்டுமென்பதுடன், 225 மி. மீ. தடிப்பான சுவர்கள் செங்கல்லில் இருத்தலும் வேண்டும். உட்புறச் சுவர் மேற்பரப்புகள், 20 மி. மீ. தடிப்பான சீமெந்து மணற் சாந்து 1:3 கலவையில் சாந்திடப்படுதல் வேண்டும். டீ1 ஆள்செல் துவார மூடி, வரைதல்களிற் காட்டப்பட்டவாறு பொருத்தப்படுதல் வேண்டும். எம்எஸ் படிகள் தயாரிக் கப்பட்டு வரைதலின்படி பொருத்தப்படுதல் வேண்டும். வீதமானது, அகழ்தல், மீள நிரப்புதல், அமைப்பு வேலை, பலப்படுத்துதல்கள், ஆதாரப்படுத்துதல், நீரகற்றுதல் மற்றும் களிமண் இடைமறுப்பான் அத்துடன் டீ1 ஆள்செல் துவார மூடி என்பவற்றுக்கான கட்டணத்தையும் உள்ள டக்கும். | இலக்கங்கள் | | | |
| | 600X600X1500 மி. மீ. அளவினதான இடைமறிக்கும் ஆள்செல் துவாரம் (உட்புறப் பரிமாணங்கள்) | | | | |
| | சேர்க்க : திணைக்கள இறுப்பனவுகளிலிருந்து 20% ஏனைய இறுப்பனவுகள் | | | | |
| | மொத்தம் | | | | |

**கண்டி மாநகரசபை**

***கழிகான் தொடுப்பொன்றைப் பெறுவதற்கான உடன்படிக்கை***

(இதனகத்துப் பின்னர் "விண்ணப்பகாரர்" எனவழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படும்) (இதன்கண் பயன்படுத்தப்பட்டவாறு இப்பதம் அல்லது சொல்லமைப்பு, சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினால் அல்லது அனுமதித்தால், ஒரு திறத்தவராகச் சொல்லப்பட்ட விண்ணப்பகாரர், அவரது/அவளது நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள் மற்றும் சாட்டுதற்காரர்கள் என்று பொருளாதல் வேண்டுமென்பதுடன், அவர்களை உள்ளடக்குதலும் வேண்டும்) ............................................. என்னுமிடத்தைச் சேர்ந்த ........................................................ என்பவருக்கும், மறுமதிறத்தவராக (இதனகத்துப் பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (இதன்கண் பயன்படுத்தப்பட்டவாறு இப்பதம் அல்லது சொல்லமைப்பு, சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினால், சொல்லப்பட்ட ஆணையாளர் அல்லது அவரை அடுத்துறுவோர் மற்றும் சாட்டுதற்காரர்கள் என்று பொருளாதல் வேண்டுமென்பதுடன், அவர்களை உள்ளடக்குதலும் வேண்டும்) கண்டி மாநகரசபை ஆணையாளருக்கும் இடையே ............................................ என்ற வகுதியினதான கழிவுப்பொருளையும் கழிவுநீரையும் (வீட்டுப் பாவனை/வீட்டுப் பாவனையல்லாத/தரும) சேகரிப்பதற்காக இந்த உடன்படிக்கை கண்டியில் செய்துகொள்ளப்படுகின்றது ; அத்துடன் விண்ணப்பகாரர், ................................................................................. ஆம் இலக்கத்திலுள்ள அமைவிடத்தினுள் அவர்களின் வளவுகளில் கழிவகற்றலமைப்பு முறைமையைத் தொழிற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாகவுள்ளாராதலாலும், அத்துடன் விண்ணப்பகாரர், கண்டி மாநரசபையின் கழிவுநீர் முகாமை முறைமையிலிருந்து அவர்களின் வளவுகளுக்குள் கழிகான் தொடுப்பொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பமொன்றைச்

செய்துள்ளாராதலாலும், அத்துடன் சபையானது, இதனகத்துப் பின்னர் தரப்பட்டு இதன்கண் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகளின் மீது மேலேயுள்ள வசதியை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதாதலாலும்,

இப்போது இதற்கான திறத்தவர்களிடையே பின்வருமாறு உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது :-

1. விண்ணப்பகாரர், உண்மையானதும் சரியானதுமான தகவலைச் சபைக்குக் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், கழிகான் தொடுப்பை வழங்கும் நோக்கத்துக்காக விண்ணப்பகாரர் செலுத்தவேண்டுமெனச் சபை தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய இறுப்பனவுகளைச் செலுத்துவதற்கு பொறுப்பேற்றலும் வேண்டும்.

2. கழிவகற்றலமைப்புச் சேவைக்கான காப்புவரியொன்று விதிக்கப்படுமிடத்து, விண்ணப்பகாரர், அவர்களின் கழிவகற்றலமைப்பு முறைமையிலிருந்து கழிவுப்பொருளைக் கையுதிர்ப்பதற்காகச் சபையினால் விதிக்கப்பட்ட மாதாந்தக் கழிவகற்றலமைப்பு இறுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படல் வேண்டும். இறுப்பனவு ஒரு மாதத்தினுட் செலுத்தப்படாதவிடத்து சபையினால் வழங்கப்பட்ட நீர் வழங்கலை அல்லது கழிவகற்றலமைப்புச் சேவையைத் தற்காலிகமாகத் துண்டிப்பதற்கான உரிமையைச் சபை தனக்கென்று ஒதுக்கிவைக்கின்றது.

3. விண்ணப்பகாரர், அவர்களின் வளவுகளினுள் உள்ளகக் கழிவகற்றலமைப்பு முறைமையைத் தொழிற்படுத்துதல் வேண்டும்.

4. (1) கண்டி மாநகரசபையினால் விதிக்கப்பட்டவையும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் விண்ணப்பகாரர் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பகாரர் –

(அ) விண்ணப்பகாரரின் கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க் குழாய்களை முறைமையுடன் தொடுக்கின்ற பொது வீதிகளின் மீதுள்ள கழிகானின் பிரதான குழாயின் அத்தகைய குழாய்களினுட் பிரவேசிப்பதற்கு, அவற்றைச் சோதனையிடுவதற்கு, திருத்துவதற்கு அல்லது துப்புரவாக்குவதற்குச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தவிர்ந்த வேறெவரேனுமாளை அனுமதித்தலுமாகாது.

(ஆ) மேற்கூறப்பட்ட வளவுகளினுள் இடப்பட்ட பொதுக் கழிகான் குழாய்களின் மீது ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிர்மாணித்தலுமாகாது.

(இ) சபையினது ஆணையாளரின் எழுத்திலான முற்சம்மதமின்றி ஏதேனும் பொதுக் கழிகானுடன் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் தனிப்பட்ட கழிகானைத் தொடுத்தலோ அல்லது தொடுக்கச் செய்தலோ ஆகாது.

(ஈ) கழிவகற்றலமைப்பு மற்றும் கழிவுநீர்க் கையுதிர்த்தற் குழாயை முறைமையுடன் தொடுக்கின்ற பொது வீதிகளின் மீதுள்ள கழிகானின் பிரதான குழாயில் ஏதேனும் குழாய்ப்பொருத்தி அல்லது துணைப்பொருள் காணாமற்போகும் அல்லது சேதப்படுத்தப்படும் போதிலெல்லாம் சபைக்கு அறிவித்தலும் வேண்டும்.

(உ) கழிவகற்றலமைப்புக் கட்டுவேலைகள் நிர்மாணிக்கப்படும்போது அல்லது அதன் பின்னர் எந்நேரத்திலும், வருகைதந்து, அவர்களின் வளவுகளினுள்ளான குழாய்களும் பொருத்திகளும் உட்பட, கழிவகற்றலமைப்புக் கட்டுவேலைகள் எல்லாவற்றையும் சோதனையிடுவதற்கு சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அனுமதியளித்தலும் வேண்டும்.

(ஊ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வரைதல்களுக்கு முரணாகக் கழிவகற்றலமைப்பு முறைமைக்கான ஏதேனும் விசாலிப்பை நிர்மாணித்தலுமாகாது.

(எ) நேரடியான கழிவுப்பொருள், மலசலக்கூடக் கழிவுநீர் மற்றும் சமையலறைக் கழிவுநீர் என்பவற்றை மட்டுமே வெளியேற்றுதலும் வேண்டும்.

(ஏ) மாதாந்தச் சிட்டையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள், கழிவகற்றலமைப்புக் கையுதிர்த்தற் சேவை சம்பந்தமாகச் சபைக்கு வருமதியான இறுப்பனவுகளை முழுமையாகச் செலுத்துதலும் வேண்டும்.

(ஐ) கழிவகற்றலமைப்புக் கையுதிர்த்தற் சேவையின் வழங்கலுடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளையும் காலத்துக்குக்காலம் அதற்கான எவையேனும் திருத்தங்களையும் கடைப்பிடித்தலும் வேண்டும் ; அத்துடன் விண்ணப்பகாரர் எவையேனும் நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாத பட்சத்தில், வழங்கப்பட்ட கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்ச் சேவை தற்காலிகமாகத் துண்டிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டுமென அவர் உடன்படுதலும் வேண்டும்.

5. சபையானது பின்வருவனவற்றுக்கான அதன் உரிமையைத் தனக்கென்று ஒதுக்கிவைக்கின்றது :-

(அ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, கழிவுநீர் முகாமை முறைமை தொடர்பான உடன்படிக்கையிலும் துணைவிதியிலும் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நியதிகளை அல்லது நிபந்தனைகளை விண்ணப்பகாரர் மீறுகின்ற பட்சத்தில், கழிகான் தொடுப்பைத் துண்டித்தல்.

(ஆ) கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர்க்குழாய்களை முறைமையுடன் தொடுக்கின்ற பொது வீதிகளின் மீதுள்ள கழிகானின் பிரதான குழாயின் சேதப்படுத்தப்பட்ட அல்லது காணாமற்போன கழிகான் குழாய்களையும் பொருத்திகளையும் அல்லது வேறெவையேனும் துணைப் பொருட்களையும் திருத்துதலும், துப்புரவாக்குதலும் அல்லது மாற்றீடு செய்தலும், அத்துடன் அத்தகைய பொருத்திகளைத் திருத்துதல், துப்புரவாக்குதல் மற்றும் மாற்றீடு செய்தல் என்பவற்றுக்கான ஆகுசெலவை விண்ணப்பகாரரிடமிருந்து அறவிடுதலும்.

(இ) விண்ணப்பகாரருக்குக் கழிவகற்றலமைப்புச் சேவைகளை வழங்குவதற்கான வீத வரிகளையும் இறுப்பனவுகளையும் அறவிடுதலும், சொந்தக்காரரினால்/சட்டப்படியான இருப்பாட்சியாளரினால் கொடுப்பனவில் தவறுகை புரியப்படும் விடயத்தில், சபையினாலான ஒன்றில் நீர் வழங்கலை அல்லது கழிவகற்றலமைப்புச் சேவைகளின் வழங்கலைத் துண்டித்தலும்.

இதற்கத்தாட்சியாக இதற்கான திறத்தவர்கள் ................................................. என்னுமிடத்தில் ................................ ஆம் ஆண்டு ........................................... மாதம் .............................. ஆந் நாளன்று தமது கையொப்பங்களையிட்டு இலச்சினையிடுகின்றனர்.

......................................,
சபைக்காகவும் அதன் சார்பிலும்
பணப்பாளர் - (கழிவுநீர் முகாமைக் கருத்திட்டம்).

சாட்சி :

1. கையொப்பம் ..................................
முகவரி ...........................................
..........................................................
..........................................................
..........................................................

2. கையொப்பம் ................................
முகவரி .........................................
........................................................
........................................................
........................................................

கையொப்பமிடப்பட்டது :
........................................................................................
....................................................................................... என்ற தன்மையிலும்
....................................................................................... என்ற தன்மையிலும்

சாட்சி :

1. .............................
.............................
தன்மை

கையொப்பம் :.....................................................

விண்ணப்பக்காரருக்காகவும் அவர் சார்பிலும்

1. கையொப்பம் ..................................
முகவரி ...........................................
..........................................................
..........................................................
..........................................................

2. கையொப்பம் ................................
முகவரி .........................................
........................................................
........................................................
........................................................

**நான்காம் அட்டவணை**

உரிமக் கட்டணம் - ரூபா 1,000.

6-225/1

**பூஜாபிட்டிய பிரதேச சபை**

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டமூலத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பூஜாபிட்டிய பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் அறிவித்தல் பூஜாபிட்டிய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதல் அமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2011.04.26.

**வாடகை வாகனங்களை நிறுத்திவைப்பது தொடர்பான துணை விதிகள்**

1. இந்தத் துணை விதிகள் பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்கு ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்திவைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.

3. பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இரண்டாவது துணை விதிக்கமைய முதலாவத அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தையும், அதற்குரிய அரச கட்டணங்களையும் சபையிடம் மாதாந்தம் செலுத்திய பின்னர் உரிய இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்திவைத்தல் வேண்டும். அந்த வாடகை வாகனங்கள் சபையில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட முடியும். கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.

4. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள. இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்திவைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை செயற்படுத்தப்படும்.

5. இந்தத் துணை விதிகளின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக்காலம் அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.

6. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விண்ணப்பப்படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

7. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப்பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக்கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.

8. மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய மாதத்துக்கான வாகனம் நிறுத்திவைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9. பூஜாபிட்டிய பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.

10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அதுபற்றி சபையிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.

12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்துகொள்வதோ கூடாது.

13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இதுபற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.

14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம்சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச்செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.

15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் "சபை" என்பது பூஜாபிட்டிய பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது பூஜாபிட்டிய பிரதேச சபையின் தலைவரையும்,

"அதிகாரம்பெற்ற அலுவலர்" என்பது பூஜாபிட்டிய பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,

"வாகனக் கட்டுப்பாட்டாளர்" என்பது பூஜாபிட்டிய பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,

"மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்" என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

*அட்டவணை 1*

**பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்திவைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்கள்**

| | | |
|---|---|---|
| பூஜாபிட்டிய மேல் சந்தி | 450 சதுர அடி | அலவத்துகொட வீதியின் மதகு அருகில் அமைந்துள்ள திலக் பேக் ஹவுஸ் குரோசரியின் அருகிலிருந்து குமாரகேயின் பழக்கடை வரையுள்ள பகுதி |
| பூஜாபிட்டிய கூட்டுறவுச் சங்கம் அருகில் | 300 சதுர அடி | பூஜாபிட்டிய கூட்டுறவுச் சங்கத்தின் எதிரில் எம். சி. பாருக் இனது பொக்காவலயில் அமைந்துள்ள ரீ. ஏ. எம். ஸ்டோர்ஸ் வரையுள்ள பகுதி |
| பூஜாபிட்டிய போதிமளுவ அருகில் | 400 சதுர அடி | பூஜாபிட்டிய மெதவல பாதையின் ஆரம்பத்திலிருந்து மெதவல நோக்கிய 20 மீற்றர் தூரம் |

| | | |
|---|---|---|
| பூஜாபிட்டிய பிரதேச சபை அருகில் | 360 சதுர அடி | பூஜாபிட்டிய பிரதேச சபை அலுவலகத்தின் அருகில் பட்டகல்ல பாதையின் பந்துல லியனகேயின் தேநீர்க்கடை அருகிலிருந்து பட்டகல்ல பாதையை நோக்கிய பட்டகல்ல பூஜாபிட்டிய பாதை வரையுள்ள பகுதி |
| பட்டகல்ல சந்தி | 180 சதுர அடி | பட்டகல்ல சந்தியிலிருந்து பூஜாபிட்டிய நோக்கிய பாதையின் இரு பகுதியிலும் |
| வேக்கட ஹதிரம சந்தி | 240 சதுர அடி | கிரளகம பாதையின் ஆரம்பம் முதல் வெலிக்கெட்டிய நோக்கிய பாதையின் 20 மீற்றர் தூரமான பாதையின் இரு பகுதியிலும் |
| நெதர்பீல்ட் அருகில் | 250 சதுர அடி | கசாவத்த இடைப்பாதைச் சந்தியிலிருந்து பூஜாபிட்டிய நோக்கிய 15 மீற்றர் வரையுள்ள பகுதி |
| புளுகொஹதன்ன சந்தி (திரான்ஸ்போமர்) | 250 சதுர அடி | திரான்ஸ்போமர் அருகிலிருந்து வெலிக்கெட்டிய நோக்கிய 20 மீற்றர் தூரப் பகுதி |
| அத்தரகம பாதைச் சந்தி | 450 சதுர அடி | அத்தரகம பாதைச் சந்தியிலிருந்து அம்பத்தன்ன நோக்கிய 20 மீற்றர் தூரப் பகுதி |
| வெலேகட புத்தர் சிலைமனை அருகில் | 250 சதுர அடி | வெலேகட புத்தர் சிலைமனை எதிரிலிருந்து அம்பத்தன்ன நோக்கிய 20 மீற்றர் தூரப் பகுதி |
| வெலேகட கலவான சந்தி | 250 சதுர அடி | முல்லேகம ஹாட்வெயார் எதிரில் (மதகு அருகிலுள்ள கடை) அம்பத்தன்னயில் இருந்து பூஜாபிட்டிய நோக்கிய திசையில் |
| அம்பத்தன்ன வர்த்தகத் தொகுதயின் அருகில் | 250 சதுர அடி | அம்பத்தன்ன வர்த்தகத் தொகுதியின் எதிரில் அமைந்துள்ள பாதைப் பகுதியின் கடை அறை இலக்கம் 1 இல் இருந்து கடை அறை இல. 5 வரையுள்ள பகுதி |

மாரத்துகொட பிரிவு

| | | |
|---|---|---|
| பொக்காவல நகரம் | 900 சதுர அடி | மொரன்கந்த பாதையின் இடதுபுறம் வன்னி ஸ்ரோர்ஸ் அருகிலிருந்து மக்கள் வங்கி வரையுள்ள பகுதி |
| பொக்காவல ஆஸ்பத்திரிச் சந்தி | 300 சதுர அடி | அரம்பேகட பாதையின் வலதுபக்க மரக்காலைக்குத் திரும்பும் சந்தியின் சிறிய பாதை அருகில் |
| மொலகொட சந்தி | 350 சதுர அடி | அரம்பேகட பாதையின் உடஹேன சந்தியிலிருந்து உடஹேன பாதையின் வலதுபுறத்தின் 350 சதுர அடி அளவான பகுதி |
| ஹரங்கஹவ பிரிவேனசந்தி | 350 சதுர அடி | அரம்பேகட பாதையின் வலதுபுறம் ஹரங்கஹவ பாதையின் எதிர்ப்புறப் பகுதி |
| ஹரங்கஹவ பத்திராத சந்தி (மெட்டிபொக்க சந்தி) | 300 சதுர அடி | அரம்பேகட பொக்காவல பாதையில் பத்திராத பாதையின் வலதுபுறம் ஆரம்பிக்கும் இடம் |

| | | |
|---|---|---|
| வேவல ருப்பவத்த சந்தி | 300 சதுர அடி | பூஜாபிட்டிய பாதை பொக்காவல பாதையின் ருப்பவத்த சந்தியிலிருந்து பொக்காவல நோக்கிய பகுதி |
| நாவின்னாபிட்டிய சந்தி | 350 சதுர அடி | பூஜாபிட்டியில் இருந்து பொக்காவல பாதையின் வலதுபுறம் நாவின்னபிட்டிய பாதையின் சந்தியிலிருந்து பொக்காவல நோக்கிய பகுதி |
| மாரத்துகொட பிரிவேன சந்தி | 400 சதர அடி | பூஜாபிட்டிய பொக்காவல பாதையின் மாரத்துகொட சந்தி பிரிவேன சந்தி |
| மாரத்துகொட பாடசாலைச் சந்தி | 400 சதுர அடி | பூஜாபிட்டிய பொக்காவல பாதையின் இடதுபுறம் மாரத்துகொட தேசியப் பாடசாலைக்குத் திரும்பும் சந்தியிலிருந்து பொக்காவல நோக்கிய பகுதி |
| ரம்புக்கேவெல கடமண்டிய | 400 சதுர அடி | ரம்புக்கேவெல கடமண்டியின் எதிரில் |
| தொலபிஹில்ல அம்பலம் அருகிலுள்ள சந்தி | 350 சதுர அடி | பூஜாபிட்டிய அங்கும்புர பாதையின் வலதுபுறம் தொலபிஹில்ல அம்பலத்தின் எதிரில் |
| கபல்கஸ்தன்ன புத்தர் சிலையருகில் | 300 சதுர அடி | பூஜாபிட்டியில் இருந்து அங்கும்புர பாதையின் கபல்கஸ்தன்ன புத்தர் சிலை அருகில் |

அங்கும்புர பிரிவு

| | | |
|---|---|---|
| அங்கும்புர நகர போதிய அருகில் | 900 சதுர அடி | அங்கும்புர அலவத்துகொட பாதையின் விஜேசிரி ஹோட்டல் அருகிலிருந்து இடதுபுறம் திஸ்ஸ ஹோட்டல் வரையிலுள்ள பகுதி |
| அங்கும்புர நகரம் மேல் சந்தி அருகில் | 600 சதுர அடி | அங்கும்புர பூஜாபிட்டிய பாதையின் வலதுபுறம் சமகி டேலர்ஸ் நிலையத்தின் அருகிலிருந்து சோமானந்த மாவத்தையின் ஆரம்பம் வரையுள்ள பகுதி |
| கரகஹபிட்டிய சந்தி அருகில் | 150 சதுர அடி | கரகஹபிட்டிய சந்தியின் வலதுபுறம் |
| ராமகொட்டுவ கடமண்டிய அருகில் | 150 சதுர அடி | அங்கும்புர பூஜாபிட்டிய பாதையின் ராமகொட்டுவ கடமண்டியவின் வலதுபுறம் கூட்டுறவுக் கடையின் அருகில் இருந்து பஸ் நிலையம் வரையுள்ள பகுதி |
| பெபிலிகொல்ல கடமண்டிய அருகில் | 90 சதுர அடி | கல்ஹின்ன பள்ளி வீதியின் பள்ளியகொட்டுவ கடமண்டியின் வலதுபுறம் திரு. கால்டீன் இனது கடைத்தொகுதியின் எதிரில் உள்ள பகுதி |
| கல்ஹின்ன சந்தி அருகில் | 300 சதுர அடி | திரு. சிங்ஹபாலவின் தேநீர்க்கடை அருகின் இடதுபுறத்திலிருந்து ஹோட்டல் வரையுள்ள பகுதி |
| பள்ளியகொட்டுவ கடமண்டிய அருகில் | 90 சதுர அடி | கல்ஹின்ன பள்ளி வீதியில் பள்ளியகொட்டுவ கடமண்டியவின் வலதுபுறம் திரு. கால்டீன் இனது கடைத்தொகுதியின் எதிரில் உள்ள பகுதி |
| பீரிஹெல சந்தி அருகில் | 90 சதுர அடி | பீரிஹெல பஸ் திருப்பும் சந்தி சந்தியின் அருகிலிருந்து வலதுபுறப் பாதை வரை |

| | | |
|---|---|---|
| கட்டப்புவ சந்தி அருகில் | 90 சதுர அடி | அங்கும்புர பூஜாபிட்டிய பாதையின் கட்டப்புவ கடை அருகிலுள்ள வலதுபுறம் |
| அக்கர துன சந்தி | 90 சதுர அடி | பட்டகொல்லாதெனிய பாதையின் இடதுபுறம் திரு. ஹுசேன் இனது கடைத்தொகுதியின் எதிரில் |

### அட்டவணை 2

| | | |
|---|---|---|
| 1. | லொறி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 100.00 |
| 2. | மோட்டார் வான் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 100.00 |
| 3. | ட்ரேலருடனான திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 100.00 |
| 4. | முச்சக்கர வண்டி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 50.00 |
| 5. | மோட்டார் கார் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 75.00 |
| 6. | கை திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 50.00 |

### அட்டவணை 3

அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்

1. வாகன வகையும் இலக்கமும் :
2. உரிமையாளரது பெயர் :
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :
3. முகவரி :
4. சாரதியின் பெயர் :
5. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம் :
6. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம் :
7. சாரதியின் முகவரி :
8. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :
9. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :
10. அதன் கொள்ளளவும் நிறையும் :

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின்/சாரதியின் கையொப்பம்.

திகதி :----.

தலைவரது விதப்புரை :

----,
தலைவர்.

திகதி :----.

6-225/2

**தும்பனே பிரதேச சபை**

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் 1 ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடியதும், மேற்குறித்த சட்டமூலத்தின் 126 ஆவது பிரிவின் (VII) உப பிரிவின் "ஏ" பந்தியின்படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தும்பனே பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது உப பிரிவின் (1) ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பான அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் தும்பனே பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் செயலுக்கு வரும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்.*

*கண்டி,*
*2011.04.26.*

**தும்பனே பிரதேச சபை**

***வாடகை வாகனங்களை நிறுத்திவைப்பது தொடர்பான துணை விதிகள்***

*1. இந்தத் துணை விதிகள் தும்பனே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்திவைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்திவைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.*

*3. தும்பனே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இரண்டாவது துணைவிதிக்கமைய முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தையும், அதற்குரிய அரச கட்டணங்களையும் சபையிடம் மாதாந்தம் செலுத்திய பின்னர் உரிய இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்திவைத்தல் வேண்டும். அந்த வாடகை வாகனங்கள் சபையில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட முடியும். கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.*

*4. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்திவைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை செயற்படுத்தப்படும்.*

*5. இந்தத் துணை விதிகளின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக்காலம் அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.*

*6. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விண்ணப்பப்படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.*

*7. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப்பத்திரத்தைக் காட்டும்வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக்கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.*

8. மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய மாதத்துக்கான வாகனம் நிறுத்திவைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9. தும்பனே பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.

10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அதுபற்றி சபையிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.

12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்துகொள்வதோ கூடாது.

13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இதுபற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.

14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணைவிதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம்சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச்செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.

15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் “சபை” என்பது தும்பனே பிரதேச சபையையும்,

“தலைவர்” என்பது தும்பனே பிரதேச சபையின் தலைவரையும்,

“அதிகாரம்பெற்ற அலுவலர்” என்பது தும்பனே பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,

“வாகனக் கட்டுப்பாட்டாளர்” என்பது தும்பனே பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,

“மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்” என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை 1**

**அடையாளம் செய்யப்பட்டுள்ள இடங்கள்**

1. கண்டியிலிருந்து ஹத்தரலியத்த செல்லும் பாதையில் கலகெதர பஸ் தரிப்பிடத்தின் இடதுபுறம் 50 மீற்றர் தூரம்.
2. கண்டி-குருணாகல் பாதையின் கலகெதர சந்தியின் வலதுபுறம் 100 அடி தூரம்.
3. கலகெதர-ரம்புக்கண பாதையின் மடிகே வர்த்தகத் தொகுதியின் வலதுபுறம் 100 அடி.
4. பெத்திகேவெல சந்தியின் இருபுறமும் 100 மீற்றர் தூரமாகும்.
5. அரம்பேகடை சந்தியில் கண்டி-குருணாகல் பாதையின் இடதுபுறம்.
6. அரம்பேகடையிலிருந்து பொக்காவல பாதையில் வலதன்ன சந்தியின் வலதுபுறம் 100 அடி.
7. அளுதெனிய-யட்டல சந்தி ஹத்தரலியத்தவிலிருந்து 9 ஆம் கட்டை செல்லும் பாதையின் இடதுபுறம் 50 அடி தூரம்.
8. கண்டி-குருணாகல் வீதியின் கொட்டிகாம்பே சந்தியின் இடதுபுறம் 100 அடி தூரம்.
9. கண்டி-ரம்புக்கண பாதையில் ரங்கமுவ சந்தியின் இடதுபுறம் 50 அடி தூரம்.
10. கலகெதர-ரம்புக்கண பாதையில் தேதுனுபிட்டிய இஹலகம வலதுபுறம் 50 மீற்றர்.
11. கண்டி-ரம்புக்கண பாதையில் கொடத்தலே சந்தியின் வலதுபுறம்.

12. அரம்பேகடையிலிருந்து பொக்காவல பாதையின் கிரிஹாகம சந்தியின் இடதுபுறம் 50 அடி தூரம்.
13. ஹத்தரலியத்தயிலிருந்து கண்டி வீதியின் சங்கராஜபுர சந்தியின் வலதுபுறம்.
14. ஹத்தரலியத்தயிலிருந்து கண்டி வீதி தம்பாகொட சந்தியின் வலதுபுறம் 100 அடி.
15. ஹத்தரலியத்தயிலிருந்து முருத்தெனிய வீதியின் முருத்தெனிய சந்தியின் வலதுபுறம் 50 மீற்றர்.
16. ஹத்தரலியத்தயிலிருந்து வெலிவிட்ட சிஹிவட்டன பாதை வெலிவிட்ட சந்தியின் இடதுபுறம்.
17. ஹத்தரலியத்த-போகஸ்ஹின்ன பாதையின் போகஸ்ஹின்ன சந்தியின் இடதுபுறம் 100 அடி தூரம்.
18. போகஸ்ஹின்ன பாதையில் மினிகமுவ சந்தியின் வலதுபுறம்.
19. ஹத்தரலியத்தயிலிருந்து கண்டி வீதி மீகஸ்தன்ன சந்தியின் வலதுபுறம் 50 மிற்றர்.
20. ஹத்தரலியத்தயிலிருந்து கண்டி வீதியிலிருந்து ஆரம்பிக்கும் இடதுபுறம் 100 அடி.
21. அலகல்ல பாதையின் இடதுபுறம் 50 மீற்றர்.
22. ஹத்தரலியத்த நகரிலிருந்து பள்ளேபொல பாதையின் வெலிகொடபொல சந்தியின் இடதுபுறம்.
23. ஹத்தரலியத்த-பொல்வத்த பாதையின் துங்கும்புற சந்தியிலிருந்து இடதுபுறம்.
24. ஹத்தரலியத்த-உடுவ பாதையின் உடுவ சந்தியின் இடதுபுறம்.
25. நாரங்வல சந்தியின் 2 ஆம் கட்டை பாதையிலிருந்து இடதுபுறம் 50 மீற்றர்.
26. ஓபல்ல சந்தியில் கண்டியிலிருந்து மாவத்தகம பாதையின் ஓபல்ல சந்தியின் வலதுபுறம் 100 அடி.
27. ஓபல்லவிலிருந்து மாவத்தகம பாதையில் கவுடல்ல சந்தியின் இடதுபுறம் 50 அடி.
28. கலகெதர-கண்டி வீதியின் கோப்பிவத்த 10 ஆம் கட்டை சந்தியின் இடதுபுறம் 100 அடி.
29. ஹத்தரலியத்தயிலிருந்து எரமுதுலியத்த பாதையில் எரமுதுலியத்த சந்தியின் வலதுபுறம் 50 அடி.

### அட்டவணை 2

| | | |
|---|---|---|
| 1. | லொறி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 500.00 |
| 2. | மோட்டார் வான் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 500.00 |
| 3. | ட்ரேலருடனான திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 250.00 |
| 4. | முச்சக்கர வண்டி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 250.00 |
| 5. | மோட்டார் கார் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 500.00 |
| 6. | கை திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | ரூபா 250.00 |

### அட்டவணை 3

### அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்

1. வாகன வகையும் இலக்கமும் :
2. உரிமையாளரது பெயர் :
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :
3. முகவரி :
4. சாரதியின் பெயர் :
5. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம் :
6. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம் :
7. சாரதியின் முகவரி :
8. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :
9. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :
10. அதன் கொள்ளளவும் நிறையும் :

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின்/சாரதியின் கையொப்பம்.

திகதி :----.

தலைவரது விதப்புரை :

----,
தலைவர்.

திகதி :----.

6-225/3

**ஹங்குரன்கெத்த பிரதேச சபை**

*துணை விதிகள்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 12 ஆவது பிரிவின் 1 ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த சட்டமூலத்தின் 126 ஆவது பிரிவின் (X) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஹங்குரன்கெத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது உப பிரிவின் (1) ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்குறித்த துணை விதிகள் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயலுக்கு வரும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்,*
*மத்திய மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2011.04.26.*

**நடமாடும் வியாபாரம் பற்றிய துணை விதிகள்**

1. இந்தத் துணை விதிகள் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நடமாடும் வியாபாரத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல், கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள் என அறிமுகம் செய்யப்படுகின்றன.

2. ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள எந்தவொரு வீதியிலும், பொது மைதானத்திலும், பொதுப் பூங்காவிலும், திறந்த வெளியிலும், மோட்டார் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான இடங்களிலும், வேறு ஏதும் திறந்த வெளியிலும் தலைவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு பண்டத்தையும் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காகக் கொண்டுசெல்லவோ கூடாது.

3. இந்தத் துணை விதிகளின்படி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறவிரும்பும் ஒருவர் பிரதேச சபையின் அலுவலகத்தின் மூலம் வழங்கப்படும் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் 2X2.5 செ. மீ. அளவுள்ள விண்ணப்பதாரியின் மார்புக்கு மேலான புகைப்படப் பிரதிகள் 02 உடன், விண்ணப்பிக்கும் தினத்துக்கு 30 நாட்களுக்குள் ஒட்டுநோய், தொற்றுநோய் என்பவற்றால் பீடிக்கப்பட்டில்லை என அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவர் வழங்கிய மருத்துவச் சான்றிதழையும் சேர்த்துக் கையளித்தல் வேண்டும்.

4. இரண்டாவது துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் எட்டாவது துணை விதியின்கீழ் இரத்துச்செய்யப்பட்டாலன்றி அது எந்தப் பஞ்சாங்க வருடத்துக்கு என வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியுடன் அதன் செல்லுபடிக் காலம் முடிவடையும்.

5. இரண்டாவது துணைவிதியின்படி இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் சபையில் செலுத்துதல் வேண்டும். அனுமதிப்பத்திரக் கட்டணத்தைக் காலத்துக்குக்காலம் சபை தீர்மானிக்கும். அவ்வாறு திருத்தப்பட்ட கட்டணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செயற்பாட்டுக்கு வரும்.

6. நடமாடும் வியாபாரம் பற்றி காலத்துக்குக்காலம் சபை நிறைவேற்றும் நிபந்தனைகளுக்கமைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் செயற்படுதல் வேண்டும்.

7. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள குறித்த பிரதேசமொன்றில் நடமாடும் வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின்போது அங்கு நடமாடும் வியாபாரத்தைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

8. ஆறாவது மற்றும் ஏழாவது துணைவிதிகளை மீறும் வகையில் ஒருவர் நடந்துகொள்வாரெனின், அவருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் தலைவர் மூலம் இரத்துச்செய்யப்பட முடியும். அவ்வாறு செய்யப்படுமிடத்து அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்குப் பிரதேச சபையின் தலைவரிடமிருந்து எந்தவொரு நட்டஈட்டையும் பெறுவதற்கு உரிமையில்லை.

*9.* உணவுப் பண்டங்களை விற்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நடமாடும் வியாபாரிகளும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய செயற்படுதல் வேண்டும் :-

(i) விற்பனைக்காகக் கொண்டு செல்லும் பெட்டி அல்லது பாத்திரத்தை ஆரோக்கியம் பேணும் வகையில் வைத்திருத்தல் வேண்டும். மக்கள் மற்றும் கிருமிகள் மொய்ப்பதையும் தூசு படிவதையும் தடுப்பதற்காகப் பொருத்தமான வகையில் அவற்றை மூடிவைத்தல் வேண்டும். மக்கள் அவற்றைத் தொட்டுப் பார்ப்பதற்கு இடமளித்தல் கூடாது.

(ii) உணவுப் பண்டங்களைக் கொண்டுள்ள வாகனம், மிதிவண்டி, வண்டி, பாத்திரம், தட்டம் போன்றவையும் உணவுப் பண்டங்களுடன் உராயும் எந்த உபகரணமும் அவற்றை மூடும் சாதனமும் எந்நேரமும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) உணவுப் பண்டங்களைச் சுற்றப் பயன்படுத்தும் கடதாசி அல்லது அது போன்றவை சுத்தமானதாகவும் பொருத்தமான நிலையிலும் இருத்தல் வேண்டும்.

(iv) உணவுப் பண்டங்களைக் கையாள்வதற்காகப் பயன்படுத்தும் உபகரணம் அல்லது கருவி சுத்தமானதாக இருத்தல் வேண்டும்.

(v) எவருக்கேனும் ஆபத்தையோ வேதனையையோ ஏற்படுத்தும் வகையில் நெருப்பைப் பயன்படுத்துதல் கூடாது.

(vi) நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுவோர் தமது கழிவுப் பொருட்களையோ கழிவு நீரையோ வீதியில், பொது இடங்களில், பெருந்தெருவில் அல்லது நீர்நிலைகளில் இடுதல் கூடாது.

(vii) நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து வியாபாரிகளும் வியாபாரம் செய்யும் நேரங்களில் தலைவர் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டையை நுகர்வோருக்குத் தென்படும் வண்ணம் அணிந்திருத்தல் வேண்டும்.

*10.* ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு அல்லது விலங்குகளது இறைச்சியை நடமாடும் வியாபாரி விற்பனை செய்தல் கூடாது.

*11.* இந்தத் துணை விதிகளின்கீழ் அனுமதிப்பத்திரதாரி சமைத்த அல்லது தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்கையில் உணவுப் பொருட் சட்டவிதிகளின் ஏற்பாடுகளுக்கு உட்படுதல் வேண்டும்.

*12.* ஆபத்தை விளைவிக்கும் ஒட்டுநோயொன்றினால் அனுமதிப்பத்திரதாரி பீடிக்கப்பட்டிருப்பின் அல்லது அவ்வாறான நோயாளி ஒருவர் தமது வீட்டிலிருப்பின் அல்லது அவ்வாறான நோயாளியைப் பராமரிப்பவராக இருப்பின் உடனடியாக அவர் தமது வியாபாரத்தை அவர் நிறுத்துதல் வேண்டும். அவ்வாறான நோய் பரவும் காலஎல்லை முடிவுற்ற பின்னர் தமது வியாபாரத்தைத் தொடர முடியும்.

*13.* பாதையிலோ, நடைபாதையிலோ அல்லது திறந்த வெளியிலோ பயணம் செய்யும் ஒருவருக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் வியாபாரம் செய்தல் கூடாது.

*14.* ஏதேனும் ஒரு நாளில் முற்பகல் 6.00 மணிக்கும் பிற்பகல் 7.00 மணிக்கும் இடைப்பட்ட காலம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் எந்தவொரு பொருளையும் அனுமதிப்பத்திரதாரி விற்பனைக்காகக் கொண்டுசெல்லுதல் கூடாது.

*15.* 13 ஆவது துணைவிதியை மீறும் எவரதும் விற்பனைப் பண்டங்களைத் தமது பொறுப்பில் ஏற்கவும், அவ்வாறு கையேற்கப்பட்ட பண்டங்கள் தொடர்பில் தலைவரது தீர்மானத்துக்கமைய செயற்படுவதற்கும் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

*16.* தேசிய, சமயம் அல்லது ஏனைய விழாக் காலங்களின்போது மட்டும் வருகைதரும் நடமாடும் வியாபாரிகள் பிரதேச சபை விதிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தி தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*17.* அனுமதிப்பத்திரதாரி தாம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தைக் கைமாற்றம் செய்தல் ஆகாது. அவ்வாறு கைமாற்றம் செய்யப்பட்டமை தெரியவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை இரத்துச்செய்யும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

*18.* நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுபவரது விற்பனைப் பண்டங்களையும் அனுமதிப்பத்திரத்தையும் பரிசீலிக்கும் உரிமை தலைவருக்கோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ உண்டு.

19. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறும் பட்சத்தில் அது குற்றமாகக் கருதப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றின் மூலம் அவர் குற்றவாளியாகக் காணப்படின் வழங்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டனையையும், சட்டத்தைத் தொடர்ந்து மீறும் பட்சத்தில் அதனையும் குற்றமாகக் கருதி தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டும் அந்தத் தவறு தொடர்ந்தும் செய்யப்பட்டால், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் உச்ச அளவுத் தண்டனையாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது வகுதியின் (2) ஆவது பிரிவின்கீழ் உச்சபட்ச தண்டமும் மேலதிகத் தண்டமும் விதிக்கப்படும்.

20. சொற்பத விளக்கம் :

"சபை" என்பது ஹங்குரன்கெத்த பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தலைவரையும்,

"நடமாடும் வியாபாரம்" எனப்படுவது, குறிப்பிட்ட ஒரு இடமின்றி விற்பனைப் பண்டங்களை இடத்துக்கிடம் சுமந்து சென்றோ, வாகனத்தில், மிதிவண்டியில், முச்சக்கர வண்டியில், மோட்டார் சைக்கிளில், மோட்டார் வானில் அல்லது நடமாடும் வியாபாரத்துக்கெனத் தயாரிக்கப்பட்ட இயந்திரத்தினாலோ அல்லது கைகளினாலோ இயங்கும் வாகனத்தின் மூலம் செய்யப்படும் வியாபாரம் எனவும்,

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரையும் குறிப்பிடும்.

இந்தத் துணைவிதிகளில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்துச் சிதைவுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை 1**

**நடமாடும் வியாபாரத்துக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

வருடம் :

பதிவிலக்கம் :

1. முழுப்பெயர் :
2. தனிப்பட்ட முகவரி :
3. ஆளடையாள அட்டை இலக்கம் :
4. தொலைபேசி இலக்கம் :
5. வியாபாரத்தின் தன்மை :
6. வியாபாரத்தை மேற்கொள்ளும் முறை (பண்டங்களை இடத்துக்கிடம் எவ்வாறு எடுத்துச்செல்வது என்பது) :
7. முதன்முறை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி :
8. கடந்த வருடங்களது கொடுப்பனவு விபரம் :

| வியாபாரத்தின் தன்மை | கட்டணம் | பற்றுச்சீட்டு இலக்கம் | அனுமதிப்பத்திர இலக்கம் |
|---|---|---|---|
| .................................. | .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. | .................................. |

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

***அட்டவணை 2***

**நடமாடும் வியாபார அனுமதிப்பத்திரத்துக்கான வருடாந்த கட்டணம்**

| | வியாபாரத்தின் தன்மை | கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. | மீன் விற்பனை செய்தல் | 1,000.00 |
| 2. | வடை அல்லது குறுந்தீன் வகைகள் விற்பனை செய்தல் | 750.00 |
| 3. | கடலை, முறுக்கு அல்லது பைட்ஸ் விற்பனை செய்தல் | 750.00 |
| 4. | காய்கறிகள் விற்பனை செய்தல் | 1,000.00 |
| 5. | பழவகைகள் விற்பனை செய்தல் | 1,000.00 |
| 6. | பூஞ்செடிகள், விசித்திர கன்றுகள் அல்லது கன்றுகள் விற்பனை செய்தல் | 750.00 |
| 7. | தைத்த ஆடைகள் அல்லது புடைவை வகைகள் விற்பனை செய்தல் | 750.00 |
| 8. | பாதணி வகைகள் விற்பனை செய்தல் | 750.00 |
| 9. | பிளாஸ்டிக் அல்லது சமையலறைப் பாத்திரங்கள் விற்பனை செய்தல் | 750.00 |
| 10. | வாசனைத் திரவியங்கள், களிம்புகள் விற்பனை செய்தல் | 750.00 |
| 11. | சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள் விற்பனை செய்தல் | 750.00 |
| 12. | ஐஸ்கிறீம் ஐஸ் பழம் விற்பனை செய்தல் | 750.00 |
| 13. | வினோதப் பொருட்கள் விற்பனை செய்தல் | 750.00 |
| 14. | மேற்குறித்த அட்டவணையில் பெயரிடப்படாத ஏனைய பொருட்கள் விற்பனை செய்தல் | 1,000 0 |

6-225/4

---

**பூஜாபிட்டிய பிரதேச சபை**

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டமூலத்தின் 126 ஆவது வகுதியின் (xiv) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பூஜாபிட்டிய பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் பூஜாபிட்டிய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2011.04.26.

**தகனசாலைகள் பற்றிய துணை விதிகள்**

1. இந்தத் துணை விதிகள் பூஜாபிட்டிய பிரதேச சபையின் தகனசாலைகளது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும், முறைப்படுத்தும் துணை விதிகள் எனப்படும்.

2. பூஜாபிட்டிய பிரதேச சபைக்கு உரித்தான தகனசாலைகளைப் பயன்படுத்துதல், நிருவகித்தல், அந்த தகனசாலைகளைப் பயன்படுத்துவதற்குரிய கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் என்பவற்றுக்காக இந்தத் துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. தலைவர் அல்லது அவர் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி சபைக்குச் சொந்தமான தகனசாலைகளில் எந்தவொரு இறந்த உடலையோ அல்லது அதன் பாகங்களையோ அல்லது மனித முளையத்தையோ தகனம் செய்ய முடியாது.

4. இந்தத் துணை விதிகளின் 3 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கென இங்கு விண்ணப்பிப்பவர் எனக் குறிப்பிடப்படுபவரால் அட்டவணை இரண்டாவதன் மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடமோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும் :-

(i) இறந்தவருக்கும் விண்ணப்பிப்பவருக்கும் இடையிலுள்ள உறவை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு ஆவணம் (இறந்தவர் வசித்துவந்த பிரிவின் கிராம அலுவலர் அல்லது பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் வழங்கிய சான்றிதழ் இதற்கெனப் போதுமானது. மேலும், விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சான்றிதழ்களும் இறந்தவருடனான உறவை உறுதிப்படுத்தப் போதுமானவை).

(ii) விண்ணப்பிப்பவரது தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி அல்லது விண்ணப்பிப்பவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதும் ஒரு ஆவணம்.

(iii) 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க திருமண, பிறப்பு மற்றும் இறப்பு (திருத்தப்பட்ட) சட்டமூலத்தின் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்புக் கட்டளைச் சட்டத்தின் 110 ஆவது அத்தியாயத்தின் II ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிறப்பு, இறப்புப் பதிவாளரினால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் மேலும் இறந்த உடல் தம்புள்ள பிரதேச சபையின் தகனசாலையில் தகனம் செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) இறந்தவரது மரணம் தொடர்பில் குற்றவியல் நீதி விசாரணையின்கீழ் விசாரணைகள் நடைபெற்றதெனின், விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி அல்லது நீதிபதி என்போரால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்யும் சட்டமூலத்தின் 41(இ) பிரிவின்கீழ் இறந்த உடல் தகனம் செய்யப்பட முடியும் என அனுமதி வழங்கப்பட்ட சான்றிதழ்.

(v) இறந்தே பிறந்த உடலெனின் பிறப்பு, இறப்பு பதிவுசெய்யும் சட்டமூலத்தின் 41(1) ஆவது பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவை கிடைக்கப்பெறும் ஒழுங்கின்படி பதியப்படும். அதே ஒழுங்கின்படி தகனம் செய்யப்படும் நேரம் குறிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

6. இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான தகனசாலைக் கட்டணமாக அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இந்தக் கட்டணத் தொகை பிரதேச சபையின் இணக்கத்துடன் காலத்துக்குக்காலம் திருத்தம் செய்யப்பட முடியும். இதனைக் காலத்துக்குக்காலம் சபை தீர்மானம் செய்யமுடியும். கட்டண விபரங்கள் சபையின் அலுவலகத்திலும் தகனசாலைகளிலும் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

7. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தை உடனடியாக விண்ணப்பதாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

8. நாளாந்தம் காலை 6.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மட்டுமே தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் கையளிக்கப்படுதல் வேண்டும். மாலை 6.00 மணிக்கு முன்னர் தகனம் செய்வதற்காகப் பெறப்பட்ட உடல் மாலை 6.00 மணியின் பின்னரேனும் தகனம் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும்.

9. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திலோ அல்லது அதற்கு முன்னரோ இறந்த உடலைத் தகனம் செய்வதற்காக தகனசாலைப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தாமதமாக ஒப்படைப்பதன் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களையோ அல்லது நட்டங்களையோ பிரதேச சபை பொறுப்பேற்காது.

10. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்படும் உடல் தொடர்பாக விண்ணப்பிப்பவர் பெயர், முகவரி, இறந்தவரது பெயர், அவர் இறப்பதற்கு முன்னர் வசித்த முகவரி, விண்ணப்பதாரிக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவு, தகனம் செய்யப்பட்ட திகதி, நேரம் போன்ற தகவல்களைக் கொண்ட பதிவேட்டைத் தகனசாலையின் பொறுப்பாளர் பேணிவருதல் வேண்டும்.

*11.* தகனசாலையில் உடல் தகனம் செய்யப்படும் தருணத்தில் இயந்திரக் கோளாறு காரணமாக தகனத்தை நிறைவேற்ற முடியாது போகும் தருணத்தில் தலைவரது ஆலோசனைக்கமைய உடல் தகனம் பற்றிய மாற்றொழுங்குகளை மேற்கொள்ள விண்ணப்பதாரி இணங்குதல் வேண்டும்.

*12.* இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 72 மணி நேரம் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரோ உரிய அஸ்தியைப் பொறுப்பேற்றல் வேண்டும். உரிய காலத்துக்குள் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை எவ்வாறாயினும் அகற்றிவிடுதல் சட்டபூர்வமானதாக அமையும்.

*13.* தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றித் தகனசாலையின் வளவுக்குள் நுழைதல் குற்றமாகும். எனினும், இறந்த உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருடன் வருகை தருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

*14.* தகனசாலையின் வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்வதோ அல்லது வளவுக்குள் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதோ, தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர்களது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதோ கூடாது. அவ்வாறான நட்டங்களோ சேதங்களோ ஏற்படின் உரிய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரே அவற்றைப் பொறுப்பேற்றல் வேண்டும். உரிய நட்டத்தை மதிப்பிட்டு அதுபற்றித் தெரிவிக்கப்பட்டபின் உரிய தொகையை அவர் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி உரிய தொகையைத் தண்டப்பணமாக அறவிட்டுக்கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

*15.* பிரதேச சபையின் எழுத்துமூல அனுமதியின்றித் தகனசாலையின் வளாகத்தை அலங்காரம் செய்தல் கூடாது.

*16.* பராமரித்தலுக்கும் திருத்த வேலைகளுக்குமென ஒரு தகனசாலையைக் குறிப்பிட்ட காலத்துக்கு மூடிவைக்க நேரும் பட்சத்தில் அதுபற்றிய அறிவித்தலைத் தகனசாலையின் பொது இடத்தில் பார்வையில்படும் வண்ணம் அறிவித்தல் வேண்டும்.

*17.* இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறும் பட்சத்தில் அது குற்றமாகக் கருதப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றின் மூலம் அவர் குற்றவாளியாகக் காணப்படின் வழங்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டனையையும், சட்டத்தைத் தொடர்ந்து மீறும் பட்சத்தில் அதனையும் குற்றமாகக் கருதி தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டும் அந்தத் தவறு தொடர்ந்தும் செய்யப்பட்டால், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் உச்ச அளவுத் தண்டனையாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது வகுதியின் (2) ஆவது பிரிவின்கீழ் உச்ச பட்ச தண்டமும் மேலதிகத் தண்டமும் விதிக்கப்படும்.

*18.* ''சபை'' என்பது பூஜாபிட்டிய பிரதேச சபையையும்,

''தலைவர்'' என்பது உரிய காலத்தில் வழக்கிலுள்ள எழுத்துமூல சட்டத்துக்கு ஏற்றவாறு பூஜாபிட்டிய பிரதேச சபைக்குத் தெரிவுசெய்யப்படும் தலைவரே.

''இறந்த உடல்'' என்பது மனிதனின் இறந்த உடல் அல்லது உடலின் பகுதி அல்லது இறந்தே பிறந்த உடலையும்,

''தகனசாலைப் பொறுப்பாளர்'' என்பது சபைக்கு உரித்தான தகனசாலையின் பொறுப்பாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள ஒருவரையும் குறிக்கும்.

சொற்கள் தொடர்பில் ஏதும் கருத்து பேதங்கள் ஏற்படுமிடத்து இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

### அட்டவணை 1

| | |
|---|---|
| 1. பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான கட்டணம் | ரூபா 6,000.00 |
| 2. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அல்லாத இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான கட்டணம் | ரூபா 6,500.00 |
| 3. தகனசாலை அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுக்குரிய இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான கட்டணம் | ரூபா 5,000.00 |

***அட்டவணை 2***

**பூஜாபிட்டிய பிரதேச சபையின் தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பிப்பவரது முழுப்பெயர் :
   முகவரி :
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   கிராம அலுவலர் பிரிவு :
2. இறந்தவரது பெயர் :
   வசித்த இடத்தின் முகவரி :
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   கிராம அலுவலர் பிரிவு :
3. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :
4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :
5. இறப்பைப் பதிவுசெய்த பதிவுகாரரின் பெயரும் முகவரியும் :
6. இறப்பு நடைபெற்ற விதம் :
7. இறப்பு தொடர்பாக விசாரணை நடைபெற்றதாயின் அதன் திகதியும் நேரமும் :
8. விசாரணை செய்த அலுவலரது பெயரும் பதவியும் :
9. விசாரணை அதிகாரியின் முடிவு :
10. இறந்த உடலைத் தகனம் செய்ய அனுமதி வழங்குகின்றாரா என்ற விபரம் :
11. தகனம் செய்வதற்கான திகதியும் நேரமும் :

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தேவையான சான்றிதழ்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----,
விண்ணப்பிப்பவரது கையொப்பமும் திகதியும்.

**அலுவலகப் பாவனைக்கு மட்டும்**

1. அனுமதிப்பத்திரத்தை வழங்க அனுமதிக்கிறேன்/பின்வரும் காரணங்களை முன்னிட்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

.................., ..................,
கையொப்பம் கையொப்பம்.
(செயலாளர்).

தலைவர்/அதிகாரம்பெற்ற அலுவலர், பூஜாபிட்டிய பிரதேச சபை,
திகதி :----. திகதி :----.

2. திகதி ..................... இலக்கம் ..................... கொண்ட பற்றுச்சீட்டின்படி ரூபா .................................. அறவிடப்பட்டுள்ளது.
3. அனுமதிப்பத்திரத்தைக் கையெழுத்திடுவதற்காக முன்வைக்கிறேன்.
4. வேண்டுகோளை நிராகரிப்பதற்கான காரணங்கள் :

......................,
இலிகிதரது கையொப்பம்.

திகதி :----.

*6-225/5*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

4 – PG 001250